அதிகாரம் 5

# ஜலப் பிரளயத்திற்கு முந்திய முற்பிதாக்கள்

அதிகாரம் 5 நோவாவையும், பெருவெள்ள காலத்தையும் அறிமுகப்படுத்துகிறது. பெருவெள்ளதிற்கு முந்தைய குலமரபும், நிகழ்வுகளும் "அண்ட்டிடிலுவியன்" "antediluvian" என குறிப்பிடப் பட்டிருக்கிறது, இது "அண்ட்டெ" "முன்பு" மற்றும் "முற்றிலும் அழிவு" எனும் பொருள் கொள்ளும் "டிலுவியம்" எனும் இரு லத்தீன் பதங்களின் தொகுப்பாகும், எனவே இது பெருவெள்ளத்தினை சிந்தைக் கொள்ள செய்கிறது. "பெருவெள்ளத்திற்கு முந்தைய மூதாதையர்களாகிய" ஆதாம் முதல் நோவா வரையுள்ள வேதாகம நபர்களை அடிக்கடி குறிப்பிட இப்பதம் பயன்படுத்தப்படுகிறது.

ஏற்கெனவே ஆதியாகமத்தின் ஆக்கியோன் பெருவெள்ளத்திற்கு முந்தைய ஏழு தலைமுறைகளாகிய ஆதாமின் சந்ததியாரை காயீன் மூலமாக குலமரபுகளை (அதிகாரம் 4) குறிப்பிட்டிருப்பினும், தற்போது தேசத்தின்மூலம் "ஆதாமின் குல மரபு" எனும் ஒரு புது பகுதியினை தொடங்குகிறார் (அதிகாரம் 5). இந்த இரண்டாம் குலமரபு பத்து தலைமுறைகளாகிய ஆதாம் முதல் நோவை வரையுள்ள குலமரபுகளை குறிப்பிடுகிறார்.

இவ்விரண்டு குலமரபு தொகுப்புகளும் ஆதாம் முதல் நோவை வரையுள்ள ஆண்டுகளை கணக்கிடும் வேத மாணாக்கரின் மனதில் குழப்பத்தினை ஏற்படுத்தி விடுகிறது. இதில் பல வினாக்களும் எழுகிறது: (1) காலத்தைப் பற்றிய கணக்கில், காயீனின் குல மரபினர், சேத்தின் குல மரபினருக்கு ஏறக்குறைய சமமாக இருந்தனரா? (2) அப்படியெனில், சேத்தின் குல மரபினரை விட காயீன் வழிமரபினர் ஏன் நீண்ட காலம் வாழ்ந்திருக்கின்றனர்? இது பிரச்சனையாக இருக்கிறது காயீன் வழி மரபினர் வாழ்வு தீவிரவாதம் நிறைந்ததாகவே பண்பிடப்பட்டுள்ளனர் (4:8-24; 6:1-5, 11-13). அவர்களின் வாழ்நாள் குறைந்திருக்க வேண்டுமேயொழிய கூடியிருக்கக்கூடாதென ஒருவர் நினைக்கக்கூடும். (3) சேத்தின் குலமரபினை போன்று, நெடுநாள் வாழ்ந்த காயீனின் வழி மரபினருடைய பெயர்கள் ஏன் குறிப்பிடப்படவில்லை? (4) ஒரு வேளை ஆதாம் முதல் சேத் மூலம்

நோவா வரை 10 குல மரபினை குறிப்பிடும் ஆதியாகமத்தின் ஆக்கியோன், காயீனின் ஏழு தலைமுறை வரை மாத்திரமே கூற உருவக காரணம் கொண்டிருந்தாரா? (இவ்வினாக்களுக்கு சில விடைகளைக் காண்க *நடைமுறைப்படுத்துதல்: குலமரபுகள்*, பக்கம் 216-224 காண்க.)

## சிருஷ்டிப்பும் ஆசீர்வாதமும் (5:1, 2)

**[1]ஆதாமின் வம்சவரலாறு: தேவன் மனுஷனைச் சிருஷ்டித்த நாளிலே அவனைத் தேவசாயலாக உண்டாக்கினார். [2]அவர்களை ஆணும் பெண்ணுமாகச் சிருஷ்டித்து, அவர்களை ஆசீர்வதித்து, அவர்களைச் சிருஷ்டித்த நாளிலே அவர்களுக்கு மனுஷர் என்று பேரிட்டார்.**

**வசனங்கள் 1, 2.** இவ்வசனங்களில் மற்றொரு (תּוֹלְדוֹת, *toledoth*) சொற்றொடர் குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் இது ஆதியாகமத்தின் இதர தொகுப்புகளை காட்டிலும் மாறுபட்டிருக்கிறது. **இது ஆதாமுடைய குலமரபின் [*toledoth*] நூல் [סֵפֶר, *seper*] எனும் பதத்தினை குறிப்பிடுகிறது.** இதன் எழுத்து நடையானது, ஆதியாகம நூலில் இத்தொகுப்பு இணைக்கப்பெறும் முன்னரே இக்குலமரபினைக் குறித்த எழுதப்பட்ட வேறு தொகுப்பொன்று[1] இருந்திருக்க வேண்டும் அதனை இந்நூலின் ஆக்கியோன் ஆதாமிலிருந்து சேத் முதல் நோவா வரை எழுதுவதற்கு ஆதாரமாக பயன்படுத்தியிருக்கிறார் என்பதனை தெரிவிக்கின்றது. பழைய ஏற்பாட்டின் ஆக்கியோன்கள் தொன்மை காலத்தில் வழக்கத்தில் இருந்த "கர்த்தருடைய யுத்த புத்தகம்" (எண். 21:14), "யாசேரின் புஸ்தகம்" (யோசுவா 10:13; 2 சாமு. 1:18), என வேறு பல நூல்களையும் அறிந்திருந்தனர், சில சமயம் தேவனுடைய மக்களின் பல்வேறு நிகழ்வுகளை குறிப்பிடுகையில் அவைகளிலிருந்து வசனங்கள் மேற்கோளிட்டு காட்டினார்கள்.

1, 2 ஆகிய வசனங்களில் இதர பகுதி 1:27 மற்றும் 2:4 ல் காணப்படுவதனைப் போன்ற ஒரு செய்யுள் (ABCBA) போன்ற அமைப்பினை பெற்றுள்ளது:

A1: **தேவன் மனுஷனைச் சிருஷ்டித்த நாளிலே,**
  B1: **அவனைத் தேவசாயலாக உண்டாக்கினார்,**
    C1: **அவர்களை ஆணும் பெண்ணுமாகச் சிருஷ்டித்து,**
  B2: **அவர்களை அவர் ஆசீர்வதித்து அவர்களுக்கு மனுஷர் என்று பேயரிட்டார்.**
A2: **அவர்களை ச் சிருஷ்டித்த நாளிலே.**

இப்படி ஒரே மாதிரியான சொற்களை பயன்படுத்துவதன் மூலம் இந்நூலின் ஆக்கியோன் 5 ஆம் அதிகாரத்தின் குலமரபோடுமதல் மனிதனின் படைப்பையும் (ஆதாம்) 1:26-28ன் இறையியலையும்

இணைக்கிறார். "மனிதன்" "தேவனுடைய சாயலாக படைக்கப்பட்டானென்று" மீண்டும் வலியுறுத்துகிறார். இவர் ஏற்கெனெவே மனிதனுடைய வீழ்ச்சியினையும், காயீன் மற்றும் லாமேக்கினால் நடந்தேறிய கொலைகளையும் விவரித்திருக் கிறார். சேத் முதல் நோவா வரையுள்ள நிகழ்வுகளை தொடருவதற்கு முன்னர், வீழ்ச்சியுற்ற மனிதன் இன்னமும் தேவனுடைய சாயலை பெற்றிருக்கிறான் என திரும்பவும் எடுத்துரைக்கிறர். பாவமும் சீரழிவும் பிறப்பினால் சுதந்தரிப்பதல்ல; அவைகள் மக்கள் தங்கள் இதயத்தில் எடுக்கும் தெரிவுகளின் அடிப்படையில் வரும் பலனாகும் (6:5ன் கருத்தினை காண்க). ஆதாம் மற்றும் ஏவாளிலிருந்து காயீன் வழியே தீய குலமரபினர் (4:1-24) மட்டுமன்றி, சேத்தின் வழியாக நேர்மையான குலமரபினரும் வந்தனர் (4:25-5:32).

இதன் ஆக்கியோன் படைப்பின் நிகழ்விலிருந்து மற்றுமொரு ஆய்வுப் பொருளை மீண்டும் கூறுகிறார் (1:26-28): அந்த உண்மை யாதெனில் "அவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக படைத்தார், அவர்களை ஆசீர்வதித்து அவர்களுக்கு மனிதர் என பெயரிட்டார்." பாவம் உலகத்திற்குள் வந்த பிறகும் தேவனுடைய சாயல் அவர்களிடமிருந்தது மட்டுமல்லாமல், அவர் மனிதருக்களித்த முதல் கட்டளையான "பலுகிப் பெருகி, பூமியை நிரப்புங்கள்" (1:28) எனும் இனப்பெருக்கத்தின் ஆசீர்வாதமும் தொடர்ந்தது.

வசனங்கள் 1, 2 ஆகியவற்றில் மூன்று முறை காணப்படும் எபிரெய பதமாகிய (אָדָם, *'adam*) என்பதில் சொல் விளையாட்டினை கொண்டுள்ளது. வசனம் 1ன் முதல் பாகத்தில் இதன் ஆசிரியர் முதலில் மனிதனை குறிப்பிட்டார், எனவே அங்கு எபிரெய வார்த்தை அச்சொல் "ஆதாம்" எனும் பெயர் சொல்லாக மொழிபெயர்க்கப்பட்டிருக்க வேண்டும் (5:3-5 ஐக் காண்க). வசனம் 1 இரண்டாம் பகுதியிலும் 2ஆம் வசனத்திலும் இச்சொல் மனித இனத்தை குறிக்க பயன்படுத்தப்பட்டுள்ளது, எனவே இங்கு "மனுஷர்" என மொழிபெயர்க்கப்பட்டிருக்க வேண்டும். இது 2 ஆம் வசனத்தில் உறுதிப்படுகிறது, எப்படியெனில் இங்கு இதன் ஆக்கியோன் தேவன் அவர்களை "ஆணும் பெண்ணுமாக படைத்து … அவர்களுக்கு மனுஷர் என்று பெயரிட்டாரென" குறிப்பிடுகிறார். எனவே "மனுஷன்" எனும் சொல் ஆதாமை குறிப்பிடுவதாகக் கருதக்கூடாது (NIV ஐக் காண்க). இது ஆதாம் எனும் தனிமனிதனைக் குறிப்பிடுவதில்லை மாறாக ஆண் பெண் இருவரும் உட்பட்ட மனித இனத்தை குறிப்பிடுவதாகும் (NRSV ஐக் காண்க). இங்கு பாலினங்கள் தனித்துவம் வாய்ந்தவைகளல்ல (1 கொரி. 11:11) பாலுறவு மூலம் இனவிருத்தி, குலமரபு பெருகி உலகை நிரப்புதல் போன்ற தேவனுடைய படைப்பின் நிகழ்வை முன்னெடுத்துச் செல்ல இருவரும் அவசியமாகும்.

# சேத்திலிருந்து ஏனோக்கு வரையிலான ஆதாமின் புதிய வம்ச வரலாறு (5:3-20)

## ஆதாமிலிருந்து சேத் வரை (5:3-5)

**3ஆதாம் நூற்று முப்பது வயதானபோது, தன் சாயலாகத் தன் ரூபத்தின்படியே ஒரு குமாரனைப் பெற்று, அவனுக்குச் சேத் என்று பேரிட்டான். 4ஆதாம் சேத்தைப் பெற்றபின், எண்ணூறு வருஷம் உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான். 5ஆதாம் உயிரோடிருந்த நாளெல்லாம் தொளாயிரத்து முப்பது வருஷம்; அவன் மரித்தான்.**

**வசனங்கள் 3-5.** ஆபேல் நெடுநாளுக்கு முன்னரே இறந்துப் போனார், ஆனால் ஆதாமின் குலமரபு 4:1-24ல் கூறியுள்ளபடி காயீனின் வழிதோன்றல்களின் மூலம் தொடர்ந்தது, இங்கு ஆசிரியர் ஒரு புதிய குலமரபை சேத்தின் வழியாக அறிமுகப்படுத்துகிறார். **ஆதாம்** தேவனுடைய சாயலின்படி படைக்கப்பட்டதால் (1:26, 27; 5:1) **இவர் தன் சாயலைப் போன்ற தன் உருவத்தைப் போன்ற ஒரு புதல்வனைப் பெற்றெடுத்தார்**, எனவே தேவனுடைய சாயல் வீழ்ச்சியின் போது இழந்து போகவில்லை. அசலான ஆசீர்வாதங்கள் ஆதாமினுடைய புதிய புதல்வன் வழியில் தொடர்ந்தாலும், சேத்தும் தன் பெற்றோருடைய பாவத்தின் பிரதிபலனாகிய இறப்பை அடைந்தார் (5:8).

5:3-32 ல் கூறப்பட்டுள்ள குலமரபு பட்டியலில் ஒவ்வொரு குலத்திலும் இதன் ஆக்கியோன் முதற் பிள்ளைகளை மட்டுமே குறிப்பிடுகிறார். இதில் ஆதாமினுடைய இரண்டு புதல்வர்கள் காயீன் மற்றும் ஆபேல் (4:1, 2) மற்றும் நோவாவின் மூன்று புதல்வர்கள் சேம் காம் மற்றும் யாபேத் (5:32) ஆகியோர் மட்டுமே இதில் இந்த பட்டியலிலிருந்து சற்று மாறு பட்டிருக்கிறது. ஒவ்வொரு தலைமுறையிலும அவர்களது தந்தை அவர்களை பெற்றப்பின்னர் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தாரென்றும் அதன் பின்னர் **அவர் மேலும் பல குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றாரென்றும்** ஒரே மாதிரியான முறையினை இந்நூலின் ஆக்கியோன் பின்பற்றியுள்ளார். இறுதியில் அவர் இறக்கும் போது அவரது வயது கூறப்பட்டிருக்கும்.

இவ்வதிகாரத்தில் கூறப்பட்டுள்ள மக்களின் வாழ்காலத்தைப் பற்றி சிறப்பு கவனம் எடுத்தல் அவசியமாகும். எடுத்துக்காட்டாக **ஆதாம் உயிரோடிருந்த நாளெல்லாம் தொளாயிரத்து முப்பது வருஷ.** உண்மையில் இங்கு குறிப்பிட்டுள்ள மனிதர்களில் பெரும்பான்மையோர் 900 ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்ததாக கூறப்பட்டிருக்கின்றனர். அதிகாரம் 5ல் கூறப்பட்டுள்ள நெடுநாள்

வாழ்வினை குறித்து ஐயங்கொள்வோர் இதனை மறுப்பதுண்டு. இந்த வயசுகள் நம்பத்தகுந்தவைகளல்ல என்று மறுப்பதற்குப் புறந்தள்ளி, வாசகர்கள் இவைகள் தேவனின் அருளிரக்கத்திற்கு[2] கூடுதலான பெரும் சான்றுகளாக எடுத்துக் கொள்ள வேண்டும். ஆதாம், ஏவாள் மற்றும் காயீன் ஆகியோர் தங்கள் பாவத்திற்கு உடனடி இறப்பு தண்டனைக்கு தகுதி வாய்ந்தவர்களாக இருப்பினும், தெய்வீக அருளிரக்கம் அவர்களைத் தொடர்ந்து வாழும்படி விட்டு வைத்ததனை அதிகாரம் 3 மற்றும் 4 ஆகியவை எடுத்துக் காட்டுகிறது.

பெரு வெள்ளத்திற்கு பிற்பாடு மனித இனத்தின் வாழ்நாள் பெருமளவில் குறைக்கபட்டது. நோவா 950 ஆண்டுகள் வாழ்ந்தாலும் (9:29), அவரது புதல்வர் சேம் 600 ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்தார் (11:10, 11). பல தலைமுறைகளுக்கு பின்னர் ஆபிரகாம் 175 வயதில் இறந்தார் (25:7). இவருக்கு பல நூற்றாண்டுகளுக்கு பின்னர் மோசே 120 ஆண்டுகள் வாழ்ந்தார் (உபா. 34:7). 70 அல்லது 80 ஆண்டுகள் (சங். 90:10) என பழக்கப்படும் வரை மனித வாழ்நாள் குறைந்து கொண்டே போனது.

மனித வாழ்நாளின் குறைவு ஒரு வேளை வரலாற்றின் தரம் மனித பாவத்தினால் குறைந்துக் கொண்டே போனதெனக் கூறும் தேவனுடைய வழியாக இருக்கலாம், ஆனால் அது மக்கள் தொகையிலும், நாகரீக சாதனைகளிலும் மிகவும் பெருகியது. ஆதாமின் குலமரபு அவன் இறந்தான் என இந்த அதிகாரத்தில் மீண்டும் மீண்டும் கூறி நிறைவு பெருகிறது (5:8, 11, 14, 17, 20, 27, 31 காண்க). இந்த அச்சுறுத்தும் இறப்பின் மணியோசை “எல்லாரும் பாவம் செய்தபடியினால் மரணம் எல்லாருக்கும் வந்தது போலாயிற்று” (ரோமர் 5:12) எனும் வசனத்தை நினைவுபடுத்துகிறது.

மனித இனத்தின் முன்னோர்களின் வரலாற்றின் அவர்களுக்கு புதல்வர்கள் பிறந்த வயது, அவர்கள் இறந்த வயது உள்ளிட்டவைகளை பதிவுகள் மிக துல்லியமாக எடுத்துக் கூறுகிறது. வேதத்தில் கூறப்பட்டுள்ள குலமரபு பட்டியலின் ஒப்பீடு, கொடுக்கப்பட்டுள்ள பெயர்களின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டவை, அதிலும் முக்கியமானவர்கள் அடங்கிய பெயர் பட்டியலின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டவை என்பதனை வெளிப்படுத்துகிறது. இதன் பொருள் என்னவெனில் ஏதோ ஒரு சில குறிப்பிட்ட குலமரபுகள், இருக்கும் அனைத்து குலமரபுகளை விட முக்கியமானதாக நோக்கப்படுகிறது என்பதாகும்.

## சேத்திலிருந்து ஏனோக் வரை (5:6-20)

**6சேத் நூற்றைந்து வயதானபோது, ஏனோசைப் பெற்றான். 7சேத் ஏனோசைப் பெற்றபின், எண்ணூற்றேழு வருஷம் உயிரோடிருந்து,**

குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான். 8சேத்துடைய நாளெல்லாம்
தொளாயிரத்துப் பன்னிரண்டு வருஷம்; அவன் மரித்தான். 9ஏனோஸ்
தொண்ணூறு வயதானபோது, கேனானைப் பெற்றான். 10ஏனோஸ்
கேனானைப் பெற்றபின், எண்ணூற்றுப் பதினைந்து வருஷம்
உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்.
11ஏனோசுடைய நாளெல்லாம் தொளாயிரத்து ஐந்து வருஷம், அவன்
மரித்தான். 12கேனான் எழுபது வயதானபோது, மகலாலெயேலைப்
பெற்றான். 13கேனான் மகலாலெயேலைப் பெற்றபின், எண்ணூற்று
நாற்பது வருஷம் உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும்
பெற்றான். 14கேனானுடைய நாளெல்லாம் தொளாயிரத்துப் பத்து
வருஷம்; அவன் மரித்தான். 15மகலாலெயேல் அறுபத்தைந்து
வயதானபோது, யாரேதைப் பெற்றான். 16மகலாலெயேல் யாரேதைப்
பெற்றபின், எண்ணூற்று முப்பது வருஷம் உயிரோடிருந்து,
குமாரரையும், குமாரத்திகளையும் பெற்றான். 17மகலாலெயேலுடைய
நாளெல்லாம் எண்ணூற்றுத் தொண்ணூற்று ஐந்து வருஷம்; அவன்
மரித்தான். 18யாரேத் நூற்று அறுபத்திரண்டு வயதானபோது,
ஏனோக்கைப் பெற்றான். 19யாரேத் ஏனோக்கைப் பெற்றபின்,
எண்ணூறு வருஷம் உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும்
பெற்றான். 20யாரேதுடைய நாளெல்லாம் தொளாயிரத்து
அறுபத்திரண்டு வருஷம்; அவன் மரித்தான்.

**வசனங்கள் 6-20.** 4:25, 26ல் கூறப்பட்டுள்ள கணக்கில் சேத் மற்றும் ஏனோசை தவிர கேனான் (5:9), மகலாலெயேல் (5:12) யாரேத் (5:15) உள்ளிட்ட ஆதாமின் வழிதோன்றல்களை பற்றி வெகு குறைவான தகவல்களே கூறப்பட்டுள்ளது. இவர்கள் இன்னும் இரண்டு முறை மட்டுமே வசனங்களில் காணப்படுகின்றனர், 1 நாளாகமம் குலமரபு பட்டியலின் தொடக்கத்திலும் (1 நாளா. 1:1, 2), லூக்காவின் இயேசுவின் குலமரபு பட்டியலிலும் காண்க (லூக். 3:37, 38).[3] காயீன் வழிதோன்றல்களில் கூறப்பட்டுள்ளது போல மாற்றாக கூறப் பட்டிருப்பினும், இவர்கள் முக்கியமானவர்கள்; ஏனெனில் ஆபிரகாமையும், முடிவில் அவர் வழியாக இயேசுவையும் உலக்திற்குக் கொண்டு வந்து உலகத்தை ஆசீர்வதிக்கும் தேவனுடைய திட்டத்தினை செயல்படுத்துவதில் பெரும் பங்காற்றியுள்ளனர் (12:3). என்பதால் இவர்கள் முக்கியமானவர்களாயிருக்கின்றனர்.

## ஏனோக்கிலிருந்து நோவா வரையிலான சந்ததி (5:21-32)

### ஏனோக்கிலிருந்து மெத்தூசலா வரை (5:21-24)

21ஏனோக்கு அறுபத்தைந்து வயதானபோது, மெத்தூசலாவைப்

**பெற்றான். [22]ஏனோக்கு மெத்தூசலாவைப் பெற்றபின், முந்நூறு வருஷம் தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருந்து, குமாரரையும், குமாரத்திகளையும் பெற்றான். [23]ஏனோக்குடைய நாளெல்லாம் முந்நூற்று அறுபத்தைந்து வருஷம். [24]ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருக்கையில், காணப்படாமற்போனான்; தேவன் அவனை எடுத்துக்கொண்டார்.**

**வசனங்கள் 21, 22.** சேத்திலிருந்து தொடங்கும் குலமரபு பட்டியலில் ஏனோக்கு ஏழாம் இடத்தினைப் பெறுகிறார், இது இவர் தேவனுடைய திட்டத்தில் தனிப்பட்ட முறையில் முக்கியமானவர் எனும் சிந்தைக்கு வழிவகுக்கிறது. புதிய ஏற்பாட்டில் இவர் "ஆதாமிலிருந்து ஏழாம் தலைமுறையென" குறிப்பிடப்பட்டுள்ளார் (யூதா 14; NIV).

பெருவெள்ளத்திற்கு முந்தைய மூதாதையர்களில் ஏனோக்கு மட்டுமே இறந்தார் என கூறப்படவில்லை. இதற்கு ஒரு காரணம் என்னவெனில் இவர் **மெத்தூசலாவைப் பெற்றபின், முந்நூறு வருஷம் தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருந்து** என்பதாக இருக்கக்கூடும். சேத்தினுடைய குலமரபில் வரும் பிறரைப் போன்று, பிள்ளையை மனித இனப்பெருக்கத்தின் பலனாக பிறந்தவர்களாக கூறாமல், உயிர் கொடுக்கும் தேவனுடைய கைகள் தன்னையும் மனது மனைவியையும் ஒரு புதிய குழந்தையை தந்து ஆசீர்வதித்ததென மனதால் உணர்ந்தார் (4:1ன் கருத்தினை காண்க). ஒரு வேளை அதினால் தான் அவர் "தேவனோடு சஞ்சரித்தார்" ஒரு வேளை அவர் பிள்ளைப்பேறு நிகழ்ந்தவுடன் தங்களது பிள்ளைக்கு ஆன்மிக முன்னுதாரண வாழ்க்கை வாழ வேண்டுமெனும் பொறுப்பினை உணர்ந்து தங்களது ஆன்மிக வாழ்வின் தேவையினை உணர்ந்த பெற்றோரைப் போன்றதொரு பெற்றோராக ஏனோக்கு இருந்திருக்கக்கூடும். காரணம் எதுவாயினும் ஏனோக்கு தேவனோடு சஞ்சரித்து தனது புனித பயணத்தைத் தொடங்கினார் என்பதே இங்கு அறியப்படும் முக்கிய சொற்றொடர்.

"தேவனோடு சஞ்சரித்தார்" என பொதுவாக கூறப்பட்டுள்ள இச்சொற்றொரின் துல்லியமான பொருள் என்னவென்பது தெளிவில்லை. இதே எபிரெய மொழி நடையினைப் பயன்படுத்தி கூறப்பட்டுள்ள மற்றொரு வசனம் நோவாவைக் குறித்து அவர் தேவனோடு சஞ்சரித்துக் கொண்டிருந்தான் என (6:9)[4] கூறப்பட்டுள்ளது. இந்த வசன சூழலில் அவர் நீதிமானாக, உத்தமனாக அக்காலத்தில் வாழ்ந்த குற்றமற்றவராக கூறப்படுகிறார், எப்படியாயினும் குற்றமற்றவர் என்பது நோவா பாவமற்றவர் என்பதாக பொருள்படாது, "ஏனெனில் எல்லாரும் பாவம் செய்து தேவமகிமையற்றுப் போனோம்" என (ரோமர் 3:23) கூறப்பட்டுள்ளது. இருந்த போதிலும் நோவாவும் ஏனோக்கும் விசுவாசமிக்க மனிதராக கூறப்பட்டுள்ளனர் (எபி. 11:5, 7). இவர்கள் "தாழ்மையாக தேவனோடு நடந்தனர்" (மீகா 6:8; காண்க மத். 23:23). நோவா, ஏனோக்கு.

இன்னபிறர் “தேவனோடு நடந்து” தங்கள் இதயத்தை கர்த்தரைத் தேடுவதில் அர்ப்பணித்து, அவரை மகிழ்விக்கும் வகையினை தேடினர். அவர்கள் ஒரு நெருங்கிய தனிப்பட்ட வழிபாடு மற்றும் இணைப்பை தங்கள் அன்றாட வாழ்வில் கொண்டிருந்திருக்கக்கூடும்.

**வசனம் 23. ஏனோக்குடைய நாளெல்லாம் முந்நூற்று அறுபத்தைந்து வருஷம்.** இவரது வாழ்நாள் ஒரு ஆதவன் ஆண்டிற்கு ஒத்திருக்கிறது எனவே ஏனோக்கின் வாழ்நாள் ஒரு முழுமையான வாழ்விற்கு எடுத்துக்காட்டாக இருக்கிறதென சிலர் புரிந்துக் கொள்வதுண்டு. அவர் காலத்து மக்களை விட அரைப் பகுதி குறைவான வாழ்நாளை ஏனோக்கு கொண்டிருந்தா லும், அவர் தேவனோடு இணைந்த முழு வாழ்விற்கு வழிகாட்டியாக வாழ்ந்தார்.

**வசனம் 24.** இவ்வசனம் ஏனோக்கினுடைய நேர்மையான பண்பை வலியுறுத்தும் நோக்கோடு **அவர் தேவனோடு சஞ்சரித்தாரென்ற** உண்மையினை மறுபடியும் எடுத்துரைக்கிறது (5:22 காண்க). “காணப்படாமற் போனார்” (אֵינֶנּוּ, *’eynennu*) எனும் சொல் பழைய ஏற்பாட்டு காலத்தில் இறப்பை குறிக்க பயன்படுத்தப்படும் மென்மையாக கூறப்படும் மழுங்கிய சொல்லாகும் (காண்க யோபு 7:21; 8:22; சங். 39:13[14]; 103:16). வரலாற்றின் இடைக்காலத்திய யூத உரையாசிரியர் ரசி என்பவர் தேவன் அவரை பாவம் செய்வதிலிருந்து விலக்கும் விதமாக முதிர்ச்சியடைவதற்கு முன்னரே அவரை இறக்கச் செய்தாரென்று கூறுகிறார்.[5] எப்படியாயினும் 5ஆம் அதிகாரத்தின் தொகுப்பில் ஆதாம் முதல் நோவா வரை பட்டியலிடப்பட்டுள்ள அனைவரும் அவர்களுடைய பண்பாகிய “அவன் இறந்தான்” என கூறும் சொற்றொடருக்கு முரண்பட்டிருக்கிறப்படியினால் அப்படி பொருள் கொள்ள இயலாது. இக்காலகட்டத்தில் வாழ்ந்த நபர்களிலேயே ஏனோக்கு மட்டுமே “நீ சாகவே சாகவாய்” (2:17) என ஆதாமிற்கு கொடுக்கப்பட்ட தண்டனையிலிருந்து விலக்கப்பட்டவராக சித்தரிக்கப்படுகிறார். மாறாக அவர் தன்னை சுற்றியிருந்த கொடூரமான இறப்பின் தண்டனையின் நடுவே வாழ்ந்தார்.

ஏனோக்கு தேவனோடு கொண்ட தரமான நெருக்கமான உறவிற்காக தேவன் இறப்புத் தண்டனையை அவருக்காக விலக்கி அவரை அப்படியே தம்முடைய சமூகத்தில் சேர்த்துக் கொண்டார்.[6] எபிரெய மடலின் ஆக்கியோன், “விசுவாசத்தினாலே ஏனோக்கு மரணத்தைக் காணாதபடிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான்; தேவன் அவனை எடுத்துக் கொண்டபடியினாலே, அவன் காணப்படாமற்போனான்; அவன் தேவனுக்குப் பிரியமானவனென்று அவன் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்னமே சாட்சிபெற்றான்” (எபி. 11:5) என கூறுகிறார். பெருவெள்ளத்திற்கு முன்னர்க் கூறப்பட்ட மனிதர் அனைவரும் நெடுநாள் வாழ்ந்தார்களென ஆதியாகமம் 5 அதிகாரம் கூறியிருக்க, ஏனோக்கின் நிகழ்வு அதனை விட பெரும் ஆசீர்வாதத்தின்

மீது கவனம் செலுத்த இந்த இடத்தில் கூறப்பட்டிருக்க வேண்டும். மனித வாழ்வின் முக்கிய நிகழ்வு உலகில் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தார்கள் என்பதல்ல, ஆனால் ஆன்மிக வாழ்வின் தரமே ஒருவரை தேவனுடைய நித்திய வாழ்வின் சமூகத்திற்கு வழி நடத்துகிறது.

இறப்பின் பாடுகளை காணாமல் உடல் மறுரூபமடைந்து பரலோகத்திற்கு சென்ற மற்ற ஒரே மனிதன் தீர்க்கதிரிசியாகிய எலியா மட்டுமேயாகும் (2 இராஜா. 2:1, 11). தேவன் இந்த இருவருடைய நிகழ்விலும் இறப்பின் தண்டனையை விலக்கினார், ஒருவேளை இவர்கள் “இறப்பினை வெற்றிக் கொண்ட” இயேசு கிறிஸ்துவிற்கு முன்னோடியாக இருக்கக்கூடும் (1 கொரி. 15:54).

## மெத்தூசலாவிலிருந்து லாமேக்கு வரை (5:25-27)

**25மெத்தூசலா நூற்றெண்பத்தேழு வயதானபோது, லாமேக்கைப் பெற்றான். 26மெத்தூசலா லாமேக்கைப் பெற்றபின், எழுநூற்று எண்பத்திரண்டு வருஷம் உயிரோடிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான். 27மெத்தூசலாவுடைய நாளெல்லாம் தொளாயிரத்து அறுபத்தொன்பது வருஷம்; அவன் மரித்தான்.**

**வசனங்கள் 25-27.** அறியப்பட்ட மனிதர்களிலேயே **தொளாயிரத்து அறுபத்தொன்பது வருஷம்** மிகவும் அதிக நாள் வாழ்ந்தவர் **மெத்தூசலா** என்பது இங்கு கவனிக்கப்பட வேண்டிய உண்மையாகும். இவரது தந்தை குறைவான நாட்களே வாழ்ந்தவரெனும் பட்டியலில் வந்திருக்க, இவர் ஏன் நெடுநாள் வாழ்ந்தார் என்பது விளக்கப்படவில்லை. “மெத்தூசலா” எனும் பெயரின் பொருள் வழக்கிற்குரியதாக இருக்கிறது, சிலர் கீழுலகின் கானானிய கடவுளோடு தொடர்பு படுத்தி கூறுவதுண்டு; எப்படியாயினும், போட்டியில் எறியப்படும் “ஈட்டியின் மனிதன்”[7] என்பதே இதன் பொருளாக காணப் படுகிறது.

வேத எழுத்தாளர்கள், இவர்களின் வாழ்க்கையின் பலவிதமான பிரதிபலன்களைக் கவனித்ததில், ஆதியாகமம் 5 அதிகாரத்தில் கூறப்பட்டிருப்போரை விட இவர்களது தந்தை (ஏனோக்கு), குறைவான வாழ்நாள் வாழ்ந்து, தேவனோடு இருக்கும்படியாக எடுத்துக் கொள்ளபட்டார், ஆனால் மெத்தூசலா குலமரபு பட்டியலில் கூறப்பட்டிருக்கும் எவரை விடவும் நெடுநாள் வாழ்ந்து இறப்பினால் மேற்கொள்ளப்பட்டார். இறுதி ஆய்வில், ஒரு மனிதர் எத்தனை ஆண்டுகள் வாழ்கின்றார் என்பதல்ல, எப்படி நன்றாக அவர் வாழ்கிறார் என்பதே முக்கியமாகும்; வாழ்வின் தரம் அவர் “தேவனோடு நடந்தாரா இல்லையா” என்பதனை வைத்தே முடிவு செய்யப்படுகிறது.

## லாமேக்கிலிருந்து நோவா வரை (5:28-32)

**28லாமேக்கு நூற்றெண்பத்திரண்டு வயதானபோது, ஒரு**
**குமாரனைப் பெற்று, 29கர்த்தர் சபித்த பூமியிலே நமக்கு உண்டான**
**வேலையிலும், நம்முடைய கைகளின் பிரயாசத்திலும், இவன் நம்மைத்**
**தேற்றுவான் என்று சொல்லி, அவனுக்கு நோவா என்று பேரிட்டான்.**
**30லாமேக்கு நோவாவைப் பெற்றபின், ஐந்நூற்றுத் தொண்ணூற்று ஐந்து**
**வருஷம் உயிரோடிருந்து, குமாரரையும், குமாரத்திகளையும் பெற்றான்.**
**31லாமேக்குடைய நாளெல்லாம் எழுநூற்று எழுபத்தேழு வருஷம்; அவன்**
**மரித்தான். 32நோவா ஐந்நூறு வயதானபோது, சேம், காம், யாப்பேத்**
**என்பவர்களைப் பெற்றான்.**

**வசனங்கள் 28, 29.** காயீனின் வழித்தோன்றல் போல பெயர் பெற்றிருந்தாலும், இவ்வசனங்கள் வேறொரு லாமேக்கை அறிமுகப்படுத்துகிறது (4:18-24), இவர் மிகவும் வேறுபட்ட மனிதராக இருந்தார். மற்றொரு லாமேக்கு பழிதீர்த்தல் மீது பேராவல் கொண்டு, கொலையில் மகிழ்வுற்றார், ஆனால் இவரோ மனிதரின் மேன்மையான எதிர்காலத்திற்கு நம்பிக்கை கொண்டிருந்தார். உண்மையில், 5 ஆம் அதிகாரத்தில் தனது புதல்வர் பெயரின் பொருளைக் கூறின ஒரே தந்தையாக லாமேக்கு இருக்கிறார்: **கர்த்தர் சபித்த பூமியிலே நமக்கு உண்டான வேலையிலும், நம்முடைய கைகளின் பிரயாசத்திலும், இவன் நம்மைத் தேற்றுவான் என்று சொல்லி, அவனுக்கு நோவா என்று பேரிட்டான்.** (נֹחַ, *Noach)* "நோவா" என்பதின் சொல்லிணக்கணம் உறுதியற்றதாக இருக்கிறது. வசனம் 29 ல், (נָחַם, *nacham*) எனும் வினைச்சொல்லில் சொல் விளையாட்டொன்று நிகழ்ந்திருப்பது போன்று தெரிகின்றது, இதனை என்ஏஎஸ்பி மொழிபெயர்ப்பு "இளைப்பாறுதல் கொடு" என மொழியாக்கம் செய்கிறது. இதன் எழுத்துப் பூர்வமான பொருள் என்னவெனில் "இளைப்பாறுதல்" (NIV) அல்லது: "சுமைத்தணிவு கொண்டு வருதல்" (NRSV). எப்படியாயினும் "நோவா" என்பது வெற்றி மற்றும் மீட்பில் ஒலிப்பது[8] போன்ற "இளைப்பாறுதலை" பொருள் கொள்ளும் (נוּחַ, *nuach*) எனும் வினைச்சொல்லோடு தொடர்புடையதாகும். இச்சொல் பல வேர் சொற்களிலிருந்து வந்திருப்பினும், இலக்கிய நடையில் பயன் படுத்தப்பட்டதற்கு இதுவும் ஒரு எடுத்துகாட்டாக இருக்கிறது.

"நமக்கு உண்டான வேலையிலும், நம்முடைய கையின் பிரயாசத்திலும், இவன் நம்மை தேற்றுவான்" என "நோவாவை" குறித்து "லாமேக்கு" கூறும் போக்கு, ஒருவேளை தந்தை தனது புதல்வனை இரண்டாவது ஆதாமாக பொருள்படுத்துகிறாரோ என பொருள் கொள்ளச் செய்கிறது. ஒருவேளை ஏதோ ஒரு வழியில் உலகின் மீதான சாபத்தினை நீக்கி, உணவிற்காக நிலத்தில் பாடுபடுவோரின்

வருத்தத்தை அகற்றும் பெண்மணியின் வித்து இவராக இருக்கக்கூடுமென நம்பிக்கை கொண்டிருந்திருக்கக்கூடும் (3:15). இவர், தேவன் இந்த மனிதனை வைத்து என்ன செய்யப்போகிறார் என்பதனை குறித்து எவ்வித எண்ணம் கொண்டிருந்தாலும், நோவாவையும் அவரது இல்லத்தாரையும் தவிர்த்து, தீயவர்கள் மற்றும் அரக்க பண்பு கொண்ட மக்களை பெரு வெள்ளத்தால் அழித்து, இவர் வழியாக ஒரு புதிய மனித இனம் உருவாகும் என்பதனை லாமேக்கு புரிந்திருக்கவில்லை.

**வசனங்கள் 30, 31. லாமேக்குடைய நாளெல்லாம் எழுநூற்று எழுபத்தேழு வருஷம்; அவன் மரித்தான்.** "7" என்கிற எண்ணின் கூட்டில் இவரது வயது சித்தரிக்க பயன்படுத்தப்படுகிறப்படியினால், "ஏழு" எனும் எண்ணின் நிறைவைப்போன்று நோவாவின் தந்தை ஒரு நிறைவான வாழ்வை வாழ்ந்தார் என்பதனை வாசகர்கள் கவனிக்க வேண்டும். இருப்பினும் இவர் இதனைப்போன்ற சீர்மிக்க வாழ்வை வாழ்ந்தார் என்பதற்கு எவ்வித வசனக் குறிப்புமில்லை. மாறாக அவர் காலத்தில் இருந்த தலைமுறையினர் செய்த கடினமான "வேலைகளையும்," போராட்டங்களையும் இவர் எடுத்துக் கூறுகிறார் (5:29). **லாமேக்கு நோவாவைப் பெற்றபின், ஐந்நூற்றுத் தொண்ணூற்று ஐந்து வருஷம் உயிரோடிருந்து, குமாரரையும், குமாரத்திகளையும் பெற்றான்.** இந்த நெடுநாள் வாழ்வில் இவர் பல பேரப்பிள்ளைகளையும் மற்றும் அவர்களுடைய பிள்ளைகளையும் கண்டிப்பாக பார்த்திருப்பார். ஏனெனில் (5:30-32; 7:6) கால வரிசைப்பட்டியலில் லாமேக்கு பெருவெள்ளத்திற்கு 5 வருடங்களுக்கு முன்னர் வரை வாழ்ந்தபடியால் பெயர்க் கூறப்படாத அவருடைய "குமாரர் மற்றும் குமாரத்திகளின்" வழி மரபினர் தீய தலைமுறையின் ஒரு பகுதியாக இருப்பதனை குறித்து அவர் எச்சரிக்கை கொண்டவராக இருக்க வேண்டும்.

**வசனம் 32.** "நீதியின் பிரசங்கியாராகிய" **நோவா** (2 பேதுரு 2:5), தன்னுடைய பேழை கட்டப்பட்டு கொண்டிருக்கும் போதே தன் காலத்து மக்களை தனது செய்தியின் மூலம் கடிந்து கூறினார் (எபி. 11:7; 1 பேதுரு 3:20). இது லாமேக்கின் இதயத்திற்கு மிகவும் வலியையும் கவலையையும் அளித்திருக்கும். நோவாவிற்கு **சேம், காம் மற்றும் யாபேத்** எனும் மணமான மூன்று புதல்வர்கள் இருந்தாலும், லாமேக்கின் வாழ்நாளின்[9] போது இவர்களுக்கு பிள்ளைகள் இருந்ததாக வசனக் குறிப்புகள் எதுவும் இல்லை. எனவே லாமேக்கு தனக்கு வழிமரபு அல்லது எதிர் காலம் அற்று போகுமோ எனும் அச்சத்தையும், எண்ணக்குலைவையும் அனுபவித்திருக்கக்கூடும். லாமேக்கு பெருவெள்ளத்திற்கு 5 ஆண்டுகள் முன்னர் வரை வாழ்ந்ததால் தன் வாழ்நாளின் இறுதி காலத்தில் உலகினை நிறைத்திருந்த பெருந்தீமையின் கொடுமையையும், தீவிரவாதத்தையும் அவர் பொறுத்துக் கொள்ள வேண்டியதாக இருந்தது. இதில் "7" எனும் உருவகத்தில் கூறப்படும் ஒருவரும் நிறைவான வாழ்வை வாழ்ந்ததாக

கூறப்படவிலை, ஏற்கெனவே கடந்த அதிகாரத்தில் கூறப்பட்டது போன்று இந்த எண் வேத குலமரபுகளில் அடிக்கடி உருவக பொருளினைக் கொண்டிருந்தாலும், லாமேக்கினுடைய வாழ்வில் அது போன்று இருக்கவில்லை.

"நோவாவின் நாட்களெல்லாம் தொளாயிரத்து ஐம்பது வருஷம்; அவன் மரித்தான்" என இதன் பிற்பாடு கூறப்படுகிற 9:29 ல் நாம் கற்றிகிறோம்.

## நடைமுறைப்படுத்துதல்

### குலமரபுகள் (4:17-5:32)

அதிகாரம் நான்கில் காயீனுடைய வழிமரபினரின் பாவத்தின் பெருக்கம் விவரிக்கப்பட்டுள்ளது; ஆனால் 5 ம் அதிகாரம் சேத் தொடங்கி நோவா வரையுள்ள தேவனைத் தொழுத வழிமரபினரை விவரிக்கிறது: இது மனிதன் தேவனுடைய சாயலாக மனிதன் படைக்கப்பட்டது, அவனுக்கு "பலுகி பெருகி உலகத்தை நிரப்புங்களெனும்" (1:26-28) கட்டளைக் கொடுக்கப்பட்டது ஆகியவற்றை பின்னோக்கி தொடருகிறது. இதன் முக்கிய நோக்கமென்னவெனில் தகவல்களை தொடருவதற்கு முன்னர் படைப்பிலிருந்து பெருவெள்ளம் வரையிலான நிகழ்வுகளுக் கிடையேயுள்ள இடைவெளியினை விரைந்து நிரப்ப வேண்டும் என்பதாகும், ஆனால் அது ஆதாமினுடைய பாவத்தின் விளைவால் (ரோமர் 5:17). "பாவம் எப்படி உலகத்தை ஆண்டுகொண்டது" என்ற கரடுமுரடான உண்மையினை விவரிக்கிறது. 3:15ல் முன்னுரைத்த முரண்பாடு 6:1-8ல் உச்சத்தினை அடைந்து விடும் என இது எதிர்நோக்குகிறது: ஒரு பக்கம் தீவிரவாத காயீன் வழிமரபு, மற்றும் மறுபக்கம் சேத்தினுடைய நேர்மையான வழிமரபு இங்கே முரண்பாடு முதலாவது நோவாவின் வாழ்வில் காணப்படுகிறது.

*தெரிவு செய்வதற்குரிய குலமரபுகள்.* 4:17-24ல் இதன் ஆக்கியோன் காயீனுடைய ஏழு தலைமுறைகளை அளிக்கிறார். (இத்தொகுப்பு ஆதாமையும் இணைக்கப்பெற்றது.) அதன் பின்னர் அதிகாரம் - 5-ல் ஆதாம் தொடங்கி நோவா வரையுள்ள பெருவெள்ளக்கால 10 தலைமுறைகளை பட்டியலிடுகிறார். பிற்கால குலமரபை நேரடியாக விளக்குவது, 1600 களில் ஐரீஸ் நாட்டு இறையியல் வாதியும், வரலாற்றாசிரியருமான ஜேம்ஸ் உஸ்ஸர் அவர்கள் ஆதாம் முதல் நோவா வரை 900 ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்தவர்களின் தொகுப்போடு ஒரு முழுமையான கால அட்டவணையை தொகுத்திருக்கிறார். எனினும் பலர் இத்தொகுப்பில்க் கூறப்பட்டுள்ள மனிதரின் வாழ்காலம் நம்ப இயலாதவையெனக் கூறுகின்றனர்,

ஒருவேளை பெருவெள்ளத்திற்கு முன்னர் உலகில் இருந்த சூழல் தற்கால உலகின் சூழலை விட மாறுபட்டிருந்திருக்கக்கூடும், எனவே நெடுநாள் வாழ்ந்தவர்கள் சாத்தியகூறுகளின் எல்லைகளுக்கு வெளியே இல்லை.

உஸ்ஸர் அவர்கள் ஆதாம் முதல் நோவா வரையுள்ள பத்து தலைமுறை பதிவுகளுக்கிடையில் எவ்வித இடைவெளியும் இல்லையென நம்பினார். அவர் வானவியல் பதிவுகளை ஆராய்ந்து, தொன்மைக்கால நாட்காட்டியை தொகுத்து, மற்றும் தொன்மைக்கால அரசர்களின் வரலாற்று பதிவுகளை படித்திருக்கிறார். இவைகளின் அடிப்படையில், உஸ்ஸர் அவர்கள் 5 ஆம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ள பெருவெள்ளதிற்கு முன்னான மூதாதையர்களின் வாழ்நாளை கணக்கிட்டார். அதன்படி படைப்பிற்குப் பின் 1656 ஆம் ஆண்டில் பெருவெள்ளம் கி.மு.2348 ஆம் ஆண்டில் நிகழ்ந்திருக்க வேண்டுமெனும் முடிவிற்கு வந்தார். கணித நடைமுறையினை பின்னோக்கி நிகழ்த்தி, படைப்பை பெருவெள்ளத்திற்கு 1656 முன்னர் கி.மு. 4004 என தேதியிட்டார்.

இதில் காணப்படும் பிரச்சனை என்னவெனில் இது ஒரு குறுகிய காலத்தில் ஆதியாகமத்தின் தொடக்க அதிகாரங்களின் அனைத்து பதிவுகள், வரலாறு மற்றும் தொல்பொருள் ஆராய்ச்சி[10] மூலம் நாம் வெகுவாக அறிந்திருக்கும் தொன்மைக் கால நிகழ்வுகளை இடம் பெறச் செய்வதாகும். படைப்பு மற்றும் பெருவெள்ளத்திற்கிடையே வெறும் 1656 ஆண்டுகள் என்பதனை ஏற்றுக் கொள்ள கடினமாக இருப்பதற்கு எகிப்தே முதன்மை எடுத்துகாட்டாக இருக்கிறது: முடிவான தொல்பொருள் ஆராய்ச்சியின் சான்றுகள் எகிப்தின் முதல் அரச குலத்தை கி.மு. 3100 என இடம் அமர்த்துகிறது. அதே போன்ற மற்றொரு சான்று நைல் பள்ளத்தாக்கில் ஒரு அரசரின் தலைமையில் ஒன்றுபட்ட அரசொன்று இருந்ததாகவும், மேலும் பல பிளவுபட்ட அரசுகள் வெகு காலத்திற்கு முன்னரே தொன்மைகால உலகில் இருந்ததாகவும் கூறுகிறது. இவைகள் ஆதியாகமம் 10ல் கூறப்பட்டுள்ளது போன்று பெருவெள்ளம் நிகழ்ந்து அதன் பின்னர் மனித இனம் பெருகுவதற்கு முன்னரே இருந்திருப்பதற்கு வாய்ப்புகள் மிக குறைவு. ஆகவே ஆதியாகமம் 5 ஆம் அதிகாரத்தினை குறிப்பாக வேறு வேத குலமரபு பட்டியலில் இடைவெளிகள் இருக்கின்றபடியினால் உஸ்ஸர் அவர்கள் விளக்கினதை விட நாம் சற்று வேறுபட்டு விளக்க வேண்டியது அவசியமாகிறது.[11]

தொன்மைக்கால உலகில் குலமரபு பட்டியல்கள் எழுதப்படும் காலத்திற்கு முன்னரே அவைகள் ஆடம்பரத்திற்காகவும் மற்றும் நினைவில் வைத்துக் கொள்வதற்காகவும் அடிக்கடி சுருக்கப்பட்டன. சில சமயங்களில் பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டிருக்கும் ஒரு பெயர் தனி நபரை குறிப்பிடாமல் நூறு ஆண்டுகள் நீடித்த அவரது முழு வழிமரபையும் அல்லது குலத்தையும் குறிக்க பயன்படுத்தப்

பட்டிருக்கும். நியாயாதிபதிகள் 1:3, இதற்கு தெளிவான எடுத்துக்காட்டாக உள்ளது. இச்சொற்றொடர் “யூதா தன் சகோதரனாகிய சிமியோனை நோக்கியென” “யூதா” மற்றும் “சிமியோன்” ஆகிய தனி நபர்களை குறிப்பிடுகிறது. எப்படியாயினும் யாக்கோபின் நேரடி புதல்வர்களாகிய யூதா மற்றும் சிமியோன் ஆகியோர் நூறாண்டு காலத்திற்கு முன்னரே இறந்துவிட்டனர்,[12] எனவே இச்சூழலை மிக கவனமாக உற்று நோக்குகையில் இப்பகுதியானது முழு குலமரபை குறிப்பிடுகிறது.

*எண் “10.”* குலமரபு பட்டியலை புரிந்துகொள்ள எண்களின் முக்கியத்துவத்தை கவனித்தல் அவசியமாகும். 5:1-32ல் ஆதாமிலிருந்து நோவா வரை 10 தலைமுறைகள் விளக்கப்பட்டுள்ளது. 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து இந்த பட்டியல் தொன்மைக்கால சுமேரிய அரசர்களுடைய குலமரபு பட்டியலோடு ஒப்பிட்டு பார்க்கப்பட்டு வருகிறது. அந்த பட்டியல் பத்து அரசர்களை பெயரிட்டிருக்கிறது, இவர்கள் அனைவரும் பெரு வெள்ளத்திற்கு முன்னரே மிக நெடுநாள் வாழ்ந்திருக்கின்றனர்.

இந்த மெசொபொத்தோமிய ஆட்சியாளர்கள் பதிவுகள் ஆதியாகமம் 5 கூறப்பட்டுள்ள பத்து பெயர்களுக்கு சான்றாகவும், நெடுநாள் வாழ்ந்த மூதாதையருக்கு காரணமாகவும் நோக்கப்படுகின்றனர். எப்படியாயினும் இந்த பட்டியல்களில் ஒற்றுமைகளை விட வேறுபாடுகளே மிகப் பெரியதாக உள்ளது. இந்த வேறுபாடுகளில் பலவற்றை எடுத்துகாட்ட இயலுமெனினும், சில எடுத்துக்காட்டுகளே போதுமானதாகும். (1) சுமேரிய அரசர்களுடைய கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்ற அல்லது மறுகட்டமைப்பு செய்யப்பட்ட மற்ற மொழியாக்க பட்டியல்கள் பத்து பேரை கொண்டதாக இல்லாமல் ஏழு அல்லது ஒன்பது அரசர்களைக் கொண்டதாகவே இருக்கிறது. (2) ஒரு பட்டியல் 10 தலைமுறைகளை கொண்டதாக அரசர்களை மட்டுமே குறிப்பிட்டிருப்பினும், வேதத்தில் கூறப்பட்டுள்ளது போன்று அது முதல் மனிதனிலிருந்து தொடங்குவதல்ல. (3) இங்கு தொகுக்கப்பட்டுள்ள அரசர்களின் பட்டியல் மெசொபொத்தோமியா பட்டணங்களின் மீது அவர்களது சட்டமுறைமையை உரிமை கோருவதற்காக எழுதப்பட்டவையே ஒழிய ஆதாமிலிருந்து உயிரோடுள்ள நோவா மற்றும் அவரது இல்லத்தார் வரையுள்ள மனிதரின் வரலாற்றினை குறிப்பிடுவதற்கல்ல (4) சுமேரிய அரசர்களுடைய ஆட்சி காலத்தின் அளவு, அவை எந்தப் பட்டியலின்படி பின்பற்றப்பட்டதோ அந்தப் பட்டியலை விட மாறுபட்டிருக்கிறது, மேலும் அவைகள் மிகப்படுத்தப் பட்டவைகளாகும். அதில் நெடுநாள் ஆட்சிகாலமாக 72,000 ஆண்டுகளும், குறைந்தபட்ச ஆட்சிக்காலமாக 6,000 ஆண்டுகளாக கூறப்பட்டுள்ளது.[13] இவைகளை ஒன்றிணைத்துப் பார்க்கையில் வேதத்தில் கூறப்பட்டுள்ள மூதாதையர்களின்

வாழ்நாட்களை விட இவர்களது ஆட்சிக்காலம் ஐம்பது மடங்கு அதிகமாகும். எனவே ஆதியாகமம் 5 அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள குலமரபு பட்டியல் சுமேரிய அரசர்களின் பட்டியல் என்பது மெய் சான்றற்ற குறிப்பாகும்.

ஆதியாமத்தின் ஆக்கியோன் சுமேரி அரச பதிவுகளில் குறைந்தது ஒரு பதிவினைப் போன்று "10" எனும் எண்ணை முக்கியமான நபர்களை குறிப்பிட பயன்படுத்தினாலும், இந்த வேத ஆசிரியர் ஆதியாகமம் 5 அதிகாரத்தில் பாதுகாக்கப்பட்டுள்ள தகவல்களை மெசொபொத்தோமிய பதிவுகளை சார்ந்து எழுதினார் என எக்குறிப்பும் அதில் காணப்படவில்லை.

"10" எனும் எண்ணை இங்கு குறிப்பிடும் காரணம் என்னவென்று நாம் உறுதியாக கூற முடியாவிட்டாலும், இந்த எண் கிழக்கத்திய மக்களிடையே சிறப்பான முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகிறது. பெருவெள்ளத்திற்கு பிறகு சேமிலிருந்து (நோவாவின் புதல்வன்) ஆபிரகாம் வரை (11:10-26) மற்றொரு பத்து பேர் அடங்கிய காலமொன்று குறிப்பிடப்படுகின்றது. நிச்சயமாக பெருவெள்ளதிலிருந்து ஆபிரகாம் வரை பத்து தலைமுறைகள் இருப்பதற்கு வாய்ப்புகள் அதிகம். இது ரூத்; 4:18-22ல் பேரேஸ் முதல் தாவீது வரை பத்து சந்ததிகள் கூறப்பட்டுள்ள குலமரபு பட்டியலில் தெளிவாக காணப்படுகிறது, இது பல பெயர்கள் தவிர்க்கப்பட்டு எழுதப்பட்ட ஒரு தெரிவு செய்யப்பட்ட குலமரபு பட்டியலாகும். கடந்த பட்டியலிலும் இதுவே உண்மையாக காணப்படலாம்.

பேரேஸ் முதல் தாவீது வரை எத்தனை ஆண்டுகள் கழிந்தன என்பது எவருக்கும் தெரியாது; ஆனால் வேத எழுத்தின்படி, யோசேப்பு எகிப்தில் விற்கப்பட்ட போது பேரேஸ் பிறந்திருக்கிறார் (38:29; 39:1). இங்கு யோசேப்பு எகிப்திற்கு சென்ற காலத்தினை குறிப்பிடுவதே உண்மையான பிரச்சனையாக இருக்கிறது. இந்நிகழ்வின் தொடக்க காலம் கி.மு.1898 ஆகும். ஆனால் பல அறிஞர்கள் கி.மு. 1710 என்பதாக கூறுகின்றனர். இங்கு பேரேஸிற்கும் தாவீதிற்கும் இடையில் 188 ஆண்டுகள் குறைவுபடுகின்றது. மேலும் தாவீதின் அரசாட்சி கி.மு. 1010 என அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறபடியால், இவரது அரசாட்சிக்கும் பேரேஸின் பிறப்பிற்கும் இடையே 888 ஆண்டுகள் கழிந்தனவா (முந்தைய கருத்து) அல்லது இருவருக்கும் இடை 700 ஆண்டுகள் தானா? எனும் வினாயெழுகிறது.

பேரேஸ் முதல் தாவீது வரையுள்ள தலைமுறைகளின் எண்ணிக்கையினை தீர்மானிப்பதில் மற்றொரு பிரச்சனை என்னவெனில் எத்தனை ஆண்டுகளை ஒரு தலைமுறையென எண்ணிக்கொள்வது என்பதாகும். தொன்மைக்காலத்தில் ஒரு மனிதனின் தலைமுறை என்பது அவருக்கு பிறந்த முதல் பிள்ளையிலிருந்து[14] கணக்கிடப்படுவதாக காணப்படுகின்றது. இந்த

காலங்கள் மூதாதையரின் காலத்தில் 40 ஆண்டுகளாகவும்[15] மோசேயின் காலத்தில் வாழ்நாள் 70 ஆண்டுகளென குறுகிவிட்டபடியினால் (சங். 90:10-ஐ காண்க) 25 ஆண்டுகளாகவும் மாறுபடுகிறது. சராசரியாக 30 ஆண்டுகள் ஒரு தலைமுறையென கணக்கிடப்பட்டால் பேரேஸிலிருந்து தாவீது வரையுள்ள 888 ஆண்டுகளெனவும் 29½ தலைமுறையாகவும் இருக்கிறது. இப்படி 30 ஆண்டுகளென கணக்கிடுதல்[16] பேரேஸிருந்து தாவீது வரை 700 ஆண்டுகள் எனும் குறுகிய காலத்தையும், 23 தலைமுறைகளையும் குறிப்பிடுகிறது. எப்படி குறிப்பிடப் பட்டிருந்தாலும் அதன் முடிவு ரூத் 4:18-22ல் காணப்படும் 10ஐ விட அதிகமாக இருக்கிறது. இது "10" எனும் எண் உருவாக முக்கியத்துவம் பெற்றிருக்கிறது என்பதனை காட்டுகிறது, மேலும் 10 மிக முக்கிய மனிதர்களே குலமரபு பட்டியலில் இணைக்கப்பெற்றிருக்கின்றனர்.

*எண் "7."* ரூத் 4:18-22ல் எண் "7" என்பதும் சிறப்பான முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகின்றது. குலமரபு பட்டியலில் போவாஸ் ஏழாவதாக பட்டியலிடப்பட்டுள்ளார். இவர் தான் இந்த நிகழ்வுகளின் ஆண் கதாபாத்திரமாக இருக்கிறார்.[17] தேவனுடைய படைப்பும் ஓய்வும் ஏழு நாட்களில் நிறைவுற்றபடியால், எண் "7" மனித வரலாற்றின் தொடக்க காலந்தொட்டே முழுமையையும், நிறைவையும் காட்டுகிறது (1:1-2:3). ஆதாமினுடைய குலமரபு பட்டியல் காயீனில் தொடங்கி லாமேக்கினுடைய பிள்ளைகள் வரை ஏழு தலைமுறைகள் வரை உள்ளடங்கி லாமேக்கின் ஆண் மக்கள் வரை குறிப்பிடப்பட்டுள்ளது (4:17-22).[18]

அது ஆதாமில் தொடங்கி அவருடைய வழிமரபாகிய காயீனை உள்ளடக்கியுள்ளது, "லாமேக்கு" பெயர் பட்டியலில் ஏழாவதாக இருக்கிறது. ஐயத்திற்கு இடமின்றி பெருவெள்ளத்திற்கு முன்னர் பட்டியலிடப்பட்டிருக்கிறவர்களை விட அதிக குலமரபுகளை கொண்டவராக காயீன் இருக்கிறார், அதன் பின்னர் இதன் ஆக்கியோன் சேத்தின் தலைமுறைகளை விவரிக்கிறார். இவர் ஆதாமில் தொடங்கி சேத்தில் தொடர்ந்து, நோவாவில் நிறைவு செய்கிறார் (5:1-29). ஏன் இதன் ஆக்கியோன் பத்து பெயர்களைக் கொண்ட பெயர் பட்டியலில் இவரை ஏழாவதாக குறிப்பிடுகிறார், எதனை அடிப்படையாக கொண்டு இப்படி தொகுத்தார்? ஒருவேளை ஏழு தலைமுறைக்குள் ஒரு கொலையை செய்து அதனை பெருமை பாராட்டின லாமேக்கின் காலத்தின் தீமை மற்றும் வன்முறையின் உச்சத்தை வலியுறுத்த அவர் விரும்பியிருக்கக்கூடும்.

இறுதியில், இப்படிப்பட்ட வெறுக்கத்தக்க மற்றும் தண்டிக்கப்பட வேண்டிய பண்பு, வன்முறை மற்றும் கொலையை பரப்பும் உச்ச நிலையை அடைந்தது. அது சமூகம் முழுவதும் ஊடுருவி நோவா காலத்து பெருவெள்ளமாகிய தேவனுடைய தண்டனைக்கு உட்சென்றது. ஒருவேளை தேவன் பெருவெள்ள நிகழ்வினால்

பண்டைய உலகத்தின் முடிவிற்கு காரணமான வன்முறை மற்றும் தீமை நிறைந்த உறுப்பினர்களின் பெயர்களை மனித தலைமுறை பட்டியலில் பாதுகாக்க விருப்ப மற்றிருந்திருக்கக்கூடும். இவர்கள் லாமேக்கினுடைய பழிதீர்க்கும் ஆவியினாலே (4:23, 24) ஒவ்வொருவரும் இப்படி தீய பண்பில் வாழ்ந்தனர்.

காயீனுடைய வழிமரபில் "7" எண்ணிற்கும் லாமேக்கின் சொற்றொடரில் உள்ள அதன் பெருக்கு தொகைக்கும் கூடுதலான கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. இது இதன் வாசகர்களை அதிகாரம் 5 லும் "7" எனும் எண் முக்கியத்துவம் பெறுகிறது என்பதற்கு ஆயத்தப்படுத்துகிறது. சேத் முற்றும் ஏனோக்கின் வழியாய் வரும் ஆதாமின் தலைமுறை ஏழாம் தலைமுறையாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது (5:1-19). லாமேக்கு மற்றும் ஏனோக்கு ஆகியோர் ஆதாமின் ஏழாம் தலைமுறையாக சித்தரிக்கப்படுகின்றனர், லாமேக்கு எழுபத்தேழு முறை பழிதீர்க்கும் தீய பேராசையினை கொண்டிருக்கும் நபராக கூறப்படுகையில், ஏனோக்கு உலகத்திற்கு வாழ தகுதியற்ற, விசுவாசமிக்க தேவனுடைய பிள்ளையாக சுருங்க சொல்லப்படுகிறார். எனவே தான் தேவன் "அவரை எடுத்துக்கொண்டார்" (5:24).

மத்தேயு கூறும் இயேசுவின் குலமரபு பட்டியலில் "7" எனும் எண் பயன்படுத்தப்பட்டிருப்பதும் அதில் உள்ள இடைவெளியும் லூக்காவுடைய இயேசுவின் குலமரபு பட்டியலோடும், மேலும் பழைய ஏற்பாட்டின் தொகுப்புகளோடும் பார்க்கப்பட வேண்டும். மத்தேயு 1:1-17ல் ஆபிரகாம் முதல் இயேசு வரை 42 தலைமுறைகள் பட்டியலிப்பட்டுள்ளது, இவை மூன்று பதினான்கு தலைமுறைகளான குழுக்களாக பிரிக்கப்பட்டிருக்கிறது (7×2). எப்படியாயினும், மத்தேயு இந்த எண்களுக்கு வர, இரண்டாம் குழுவில் இறுதியிலும் மற்றும் மூன்றாம் குழுவில் முதலிலும் என "எகோனியாவின்" பெயரை இரு முறை பயன்படுத்துகிறார் (மத். 1:11, 12).

லூக்கா 3:23-38ல் குலமரபினை முதலில் இரண்டு குழுக்களாக பட்டியலிடுகிறார், ஒவ்வொரு குழுவிலும் இருபத்தொரு தலைமுறைகள் கூறப்பட்டுள்ளது (7×3), இயேசுவிலிருந்து தாவீது வரை, பின்னர் தாவீதிலிருந்து ஆபிரகாம் வரை பதினான்கு தலைமுறைகளாக கூறப்பட்டுள்ளது (7×2). இறுதியாக இவர் இருபத்தொரு தலைமுறைகளாக (7×3) ஆபிரகாமிலிருந்து ஆதாம் வரை குறிப்பிடுகிறார். இயேசுவிலிருந்து ஆதாம் வரையுள்ள பின்னோக்கின தலைமுறைகள் மொத்தம் எழுபத்தேழாகும் (7×11). இதில் பின்வருபவர்கள் லூக்காவினால் முக்கியமாகக் கூறப்பட்டுள்ளனர்: ஏழாவதாக ஏனோக்கு, பதினான்காவதாக சேலா மற்றும் ஆபிரகாம் இருபத்தோராவது நபராக இடம் பெறுகிறார்கள். அத்தி இருபத்தெட்டாவது இடத்திலும், தாவீது முப்பத்தைந்தாவது

இடத்திலும் மற்றும் யோனானின் புதல்வராகிய யோசேப்பு நாற்பத்திரண்டாவது இடத்திலும் இப்படியே இத்தொகுப்பு தொடருகையில் எலியேசரின் புதல்வராகிய யோசுவா நாற்பத்தொன்பதாவது இடத்திலும், செயல்தியேல் ஐம்பத்தாறாம் இடத்திலும் மற்றும் சேமேயின் புதல்வராகிய மத்தியா அறுபத்து மூன்றாம் இடத்திலும், மத்தியாவின் புதல்வராகிய யோசேப்பு தனியாக எழுபதாவதாகவும், இறுதியாக "யோசேப்பின் சட்டபூர்வ புதல்வர்" இயேசு எழுபத்தேழாவதாக (7×11) ஆதாமின் உடல் வழி மரபாக கூறப்பட்டுள்ளனர்.[19]

தற்கால பார்வையாளர்களை மத்தேயுவில் பட்டியலிடப்பட்டுள்ள தலைமுறை எண்ணிக்கையும் மற்றும் லூக்காவிலுள்ள தொகுப்பும் அடிக்கடி பிரச்சனைகுள்ளாக்குகிறது. இவ்வாறு காணப்படக்கூடிய முரண்பாடுகள் வேதத்தின் அகத்தூண்டுதலையும் அதிகாரத்தையும் குறித்த ஐயப்பாட்டினை எழுப்புமென அவர்கள் அச்சமுறுகின்றனர். எப்படி யாயினும், அனைத்து உருப்படிகளும் மற்றும் கூறப்பட்டுள்ள தலை முறைகளின் மொத்த தொகையும் ஒன்றுபோல இருக்க வேண்டுமென எண்ணும் தொகுப்பாளர்கள் அல்லது குலமரபியல் வல்லுனர்களின் மனதில் தொன்மைக்கால வேத எழுத்தாளர்கள் ஒரு தவறை வலியுறுத்த முயற்சித்தனர். வேத எழுத்தாளர்கள் தற்போதைய ஆராய்ச்சியினை விட வேறுபட்ட முன்னுரிமைகளை கொண்டிருந்தனர், ஒவ்வொருவருக்கும் புதல்வர்கள் பிறந்தவுடனயே அவர்களது பெயரினை பதிவிடுவது அவர்களது நோக்கமல்ல. அவர்கள் தலைமுறை பட்டியலில் முக்கியமான நபர்களை அவர்களது வரலாற்று மற்றும் இறையியல் காரணங்களுக்காக பதிவு செய்தனர். ஆனால் இப்பதிவில் அடிக்கடி உட்சேர்க்கப்பட்ட எண்கள் மற்றும் ஆடம்பர எண்ணங்கள் முக்கிய பங்கு வகிக்கிறது.

மத்தேயு மற்றும் லூக்கா ஆகிய இருவருடைய குலமரபு பட்டியல் "7" எனும் எண்ணிலும் அதன் கூட்டுத்தொகையிலும் வருகின்றபடியால் வெளிப்படையாகவே "7" எனும் எண் இப்பட்டியல்களில் முக்கியத்துவம் பெறுகிறது. இவர்கள் பல்வேறு காலத்தை ஒதுக்கி எண்ணுகிற தலைமுறை பட்டியலில் காணப்படும் வேறுபாடுகள் தவறான தகவல் பதிவு அல்லது பதிவுகளை காப்பதினால் ஏற்பட்ட குறைபாடாகாது, ஆனால் இருவரும் இரண்டு வேறுபட்ட மூதாதையரின் வழியில் தாவீது முதல் இயேசு வரை வலியுறுத்துகின்றனர். இப்பட்டியல்கள் இரண்டு வேறுபட்ட நபர்களை குறிப்பிட்டாலும், இவருவரும் "7" எனும் எண்ணை அடிப்படையாக கொண்டே குழு அமைக்கின்றனர்.

மத்தேயு வேண்டுமென்றே தனது தொகுப்பிலிருந்து பெயர்களை தவிர்த்திருக்கிறார். எடுத்துக்காட்டாக மத்தேயு 1:8ல் உசியா உடனடியாக யோராமுக்கடுத்து கூறப்பட்டாலும், பழைய ஏற்பாட்டு வரலாற்று நூல்கள் யோராம் மற்றும் உசியாவிற்கிடையே (இவர்

அசரியா என்றும் அழைக்கப்பட்டார்[20]) மூன்று அரசர்கள் ஆண்டதாக கூறுகிறது. மத்தேயுவில் குறிப்பிடப்படாத அரசர்கள் அகசியா, யோவாஸ் (அல்லது யெகோவாஸ்), மற்றும் அகசியா (1 நாளா. 3:11, 12; இராஜா. 8:24; 12:1; 14:1 ஐ காண்க) NASB யோராம் "உசியாவின் தந்தை" என கூறுகிறது, ASV யோராம் உசியாவை "பெற்றான்" என கூறுகிறது. இது பழமையான மொழியாக இருப்பினும் பெற்றான் எனக் கூறப்படுவதே கிரேக்க வினைச்சொல்லின் γεννάω (*gennaō*)[21] சரியான சாரத்தைக் கொடுக்கிறது. வேதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள பெற்றான்: எனும் சொல் எப்போதும் தந்தை மகன் எனும் நேரடியான உறவை கொடுப்பதல்ல என்பதை இது தனது வாசகர் உணருவதற்கு உதவி புரிகிறது. சில சமயம் இது உசியாவின் மூதாதையரான யோராம் போன்று சாதாரணமாக பல வழிமரபுகள் நீக்கப்பட்ட மூதாதையரை குறிக்கிறது.

יָלַד (*yalad*) என்ற எபிரெய பதத்திற்கு இணையான சொல் ஆதியாகமத்திலும் ஏனைய பிற பழைய ஏற்பாட்டு நூல்களிலும் தந்தை ஒரு மகனைப் "பெற்றான்" என அடிக்கடிப் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இப்படிப்பட்ட வார்த்தைகள் எப்போதுமே உடனடியான தலைமுறையைக் குறிப்பதில்லை. பால் ஆர். கில்கிரஸ்ட் விளக்கும் போது, "எபிரெயரின் சிந்தையில், ஒரு தனிப்பட்டவர் ஒரு குழந்தையை பெற்றெடுக்கும் செயலில் பெற்றார் ஆகிறார் அல்லது அக்குழந்தையின் மூலம் முன்னோர் ஆகிறார்."[22] இது மத்தேயுவின் சொற்றொடருடன் பொருத்தமாக உள்ளது. "ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரன்" (மத். 1:1) மத்தேயு இயேசுவானவர் ஆபிரகாம் அல்லது தாவீதின் உடனடி தலைமுறை எனக் கூறுவதில்லை; இவர் அவர்கள் இருவருக்கும் தூரத்து தலை முறையினராவார், இருவரும் அவருக்குப் பிதாக்கள்.

மத்தேயுவின் வம்ச வரலாற்றில் யோயாக்கீமின் பெயர் சேர்க்கப்படவில்லை எக்கோனியாவின் பெயர் (எக்கொனியா; மத்தேயு 1:11) யோசியாவின் மகன் என்ற முறையில் சேர்க்கப்பட்டுள்ளது. உண்மையில், இவர் யோசியாவின் பேரனாவார் (2 இராஜா. 23:34; 24:1-6).

புதிய ஏற்பாட்டிலும் பழைய ஏற்பாட்டிலும் வம்சவரலாறில் பெயர் தவிர்க்கப்பட்டதின் அசாதரணமான நிகழ்வைக் கண்டோம், மற்றுமோர் பழைய ஏற்பாட்டின் உதாரணம் எஸ்றாவின் ஆசாரிய வம்ச வரலாற்றில் பெயர்கள் தவிர்க்கப்பட்டிருப்பதைக் காணலாம் (எஸ்றா 7:1-5ஐ 1 நாளா. 6:3-15 உடன் ஒத்துப் பார்க்கவும்). 1 நாளாகமத்தைக் காட்டிலும் எஸ்றாவில் ஆறு பெயர்கள் குறைவாக இருப்பதைக் காணலாம், எஸ்றாவின் வம்சவரலாற்றில் ஆசிரியர் எஸ்றாவின் ஆசாரிய வம்சவழியில் பெயர்களையெல்லாம் விவரமாகக் கூறாமல் சுருக்கமாக தருவதே இதற்கு காரணம். எஸ்றா தேவனுடைய ஆசாரியனாகவும்,

கி.மு. 458ல் சிறையிருப்பதிலிருந்து மீண்ட சமுதாயத்திற்கு ஏற்ற மறுமலர்ச்சியை கொண்டு வரவேண்டும் என்ற அடிப்படையில் எஸ்றாவின் வம்சவரலாற்றில் ஒவ்வொருவராக ஆரோன் வரைக்கும் பதிவுச் செய்வது நோக்கமன்று. ஆனால் இவர் முதல் பிரதான ஆசாரியனுக்கு தூரத்து வழிவந்தவர் என்பதற்கான தகுதியான ஆதாரத்தைக் காண்பிக்கவே பதிவு செய்யப்பட்டுள்ளது.[23]

*முடிவுரை.* இடைவெளி முன்னதாக கவனித்ததின்படி ஆதியாகமத்திலும் இருப்பதைக் காணலாம். நம்பமுடியாத நிலை என்னவெனில் விவாதத்திறக்கு அப்பாற்பட்டு பழையக் குறிப்புகள் கால வரிசையின் அடிப்படையில் உலகின் வயதை வெளிப்படுத்துகிறது. எழுத்துப் பொதுநிலை அடைவதற்கு முன்னர் மக்கள் தம் முன்னோர்களின் பெயர்களை மனப்பாடமாக வைத்திருந்தனர்.[24] காலம் செல்லச் செல்லப் பட்டியல் நீளமாக அவர்கள் அனைத்துப் பெயர்களையும் மனதில் வைக்காமல் முக்கியமானவர்களின் பெயர்களை மனதில் கொண்டனர். மக்கள் ஆவணங்களை எழுதத் தொடங்குகையில், தேவன் மோசேயை ஏவத் தொடங்கினார் அல்லது வேறு யாரோ ஒருவர் இந்த ஆவணங்களையெல்லாம் பாதுகாத்து வைத்திருக்க வேண்டும். அதில் இந்த இடைவெளிகள் நிறைந்திருக்கக்கூடும், பிற்காலத்தில் பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாட்டிலும் இருந்திருக்கலாம். எப்படியிருப்பினும், வரலாறில் தேவனுடைய நோக்கம் பொதுவான அளவு பாதுகாக்கப்பட்டதிலிருப்பதால், அது ஒரு நூல்போல படர்ந்திருப்பதைக் காண்கிறோம். முதல் ஆண் பெண் முதல் கிறிஸ்து வரும் வரை எண்ணிலடங்கா வம்சவரலாறு தொடர்கிறது கிறிஸ்துவே வாக்குப்பண்ணப்பட்ட “வித்து” (3:15). சில பெயர்கள் வழிவழியாக விட்டுப்போய் இடைவெளியாயிருப்பினும் நமது விசுவாசம் கெட்டுப்போகும் அளவிற்கு பெரியதாக எதுவும் விடப்படவில்லை. முக்கியமான பெயர்களும், நிகழ்சிகளும் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. இறுதியில் “வரலாறு என்பது அவருடைய கதை” என நாம் பகுத்தறியும் விதமாக தேவன் கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றையும் கூட்டிச் சேர்க்கும் போது கதை யுகத்தின் முழுமைக்கு நேராக நகரும் (எபே. 1:10).

## முதல் மனிதனின் சுருக்க வரலாறு (5 ம் அதிகாரம்)

ஏனோக்கின் வாழ்வை தவிர்த்து, 5 ம் அதிகாரத்தில் நாம் கற்றுக்கொள்ள அதிகம் ஒன்றுமில்லை. முதலில் பார்ப்பதற்கு பெயர்களும் காலங்களும் தான் என எண்ணத்தோன்றும். எப்படியிருப்பினும் வாசகரின் ஆழமான நோக்கத்தில் சில முக்கியமான தகவல்கள் இந்த வம்ச வரலாறில் உள்ளதை காணலாம்.

*இன்றைக்குப் போலவே மனிதர்கள் மரணத்தை சந்தித்தனர்.* ஏனோக்கைத் தவிர்த்து பட்டியலில் உள்ள ஏனையோர் எழுநூறு முதல்

ஆயிரம் ஆண்டு வரை வாழ்ந்தனர். இப்படிப்பட்ட அதிக நாள் வாழ்வை தேவன் வடிவமைத்திருந்தார் எனலாம், அதற்கு தேவன் ஒரு சிறப்பான நோக்கம் வைத்திருந்தார் எனலாம். முதலாவதாக மனிதக் குலம் சிருஷ்டிப்பின் தேவன் அவர்களுக்கு கொடுத்த முதலாம் கட்டளை நிறைவேறத்தக்கதாக பெருக்கத்திற்கு உதவும்படி அதிக காலம் வாழ்ந்தனர். “நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்புங்கள்” (1:28). இரண்டாவதாக, தேவனது வார்த்தை மூலமான வெளிப்பாடு மனிதர்களுக்கு உண்டாக இந்த நீண்ட ஆயுள் கொடுக்கப்பட்டது. எழுதியதற்கான முதல் ஆதாரம் கீழ் மெசெப்பொத்தோமியாவிலுள்ள பண்டைய சுமேரியாவிலிருந்து (கி.மு. 3300) கிடைத்துள்ளது.[25] எனவே, ஆதாமின் மரணத்திற்குப் பின் எழுத்தில் பதிவுச் செய்யப்படும் வரை நீண்ட காலத்திறகு தேவன் மனிதனுக்கு கொடுத்த வெளிப்பாட்டை அடுத்த தலை முறையினருக்கு கொடுக்க வாயின் வார்த்தைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதினால் நீண்ட ஆயுள் கொடுக்கப்பட்டது. இந்த காலத்தில் மக்கள் தொகை பெருகியது, புதிய கண்டுபிடிப்புகள் வந்தன, கலாச்சாரம் முன்னேறியது (4:17-22 காண்க). அக்காலத்தில் வரலாற்றாளர்கள் இருந்ததில்லை பின் வரும் தலைமுறையினருக்குச் சொல்ல. அந்நாளைய மனிதனின் நீண்ட வாழ்நாள் இந்நாட்களின் புத்தகங்களின் நோக்கங்களை நிறைவு செய்தது. வயதில் முதியவர் தம் பிள்ளைகளுக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் கொள்ளுப்பேரர்களுக்கும் சாட்சியாக தாங்கள் கண்டவைகளையும், கேட்டவைகளையும் தங்கள் முன்னோர்கள் வெளிப்படுத்தியவைகளை பகிர்ந்து கொண்டனர்.

எப்படியிருப்பினும், நீண்ட வாழ் நாள் மனிதனுடைய துன்மார்க்கத்திற்கு வழிவகுத்து. பல காலத்திற்கு நீதி கிடைக்க கால தாமதமாகும் போது தண்டனை தான் பலத்தை இயற்கையாகவே இழந்தது. தள்ளிப்போடப்போக குற்றவாளிகள் தங்களுக்கு தண்டனை கிடைக்காதென எண்ணினர். மரண பயம் கெட்டவர்களையும் தவறிழைக்காமல் தடுக்கும். குறிப்பாக அது மிக சமீபத்திலிருந்தால்! ஏரோதுகள், நீரோக்கள், நெப்போலியன்கள், ஹிட்லர்கள், ஸ்டாலின்கள், போன்றோர், மாகொடூரமாக ஆட்சி செய்து ஆயிரமாண்டு வாழ அனுமதிக்கப்படவில்லை எனபதால் மரணம் நம்மை நன்றியுள்ளவர்களாக இருக்கச்செய்யும்.

ஆதியாகமம் 5ல் குறிப்பிடப்பட்ட அனைவருமே முன்னதாக குறிப்பிட்டப்படி; காயீன் மற்றும் லாமேக்குப் போன்று கொலையாளிகளல்ல ஆனால் பாவிகள். இவர்கள் அதிக நாட்கள் வாழ்ந்திருந்தாலும், ஏனோக்கை தவிர ஏனையோரைப் பற்றி “... அவன் மரித்தான்” என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த சத்தியம் நம்மை தாழ்மையுள்ளவர்களாகவும் உணர்வுள்ளவர்களாகவும் வைக்கவேண்டும். இந்த சரீரப்பிரகாரமான உலகில் மாம்சமான

யாவரையும் மரணம் ஆண்டு கொண்டிருக்கிறது (ரோமர் 5:21 காண்க). துன்மார்க்கன் மட்டும் மரித்துப் போவதில்லை "அன்றியும், ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது" (எபி. 9:27). மரணம் தன் வேலையை தாமதிக்கலாம், ஆனால் அனைவர் மீதும் தன் கடனைத்தீர்க்கும். பணமும், அதிகாரமும் எவ்வளவு இருப்பினும் அதன் அதிகாரத்திற்கு விலகிட இயலாது.

*இன்றுபோலவே, பெரும்பான்மையான மக்கள் மறக்கப்பட்டனர்.* நமக்கு இருப்பதெல்லாம், ஆதாம், ஏவாள்; ஆபேல், காயீனின் சந்ததி பற்றிய மிக சிறிய அளவிலான கதை மட்டுமே (ஆதி. 2-4), பெருவெள்ளத்திற்கு முன் உள்ள மனித குலத்தின் வரலாறு ஆதியாகமம் 5ம் 6ம் அதிகாரங்களில் உள்ளது பெரும்பாலும் இந்த வரலாறும் வம்ச வரலாறுகளே, அந்தக் காலத்தின் நீண்ட வரலாறுகள்.

ஜலப்பிரளயத்திற்கு முந்திய தகவல்கள் கிடைக்காமல் போனதற்கு ஒரு காரணம் ஒருவேளை அவைகள் பாதுகாக்க வேண்டிய முக்கியத்துவம் இல்லாத தகவல்களாய் இருந்திருக்கலாம். பெரும்பான்மையான மக்கள் சும்மா வாழ்ந்தார்கள், திருமணம் செய்தார்கள், பிள்ளைகளைப் பெற்றெடுத்தனர், அதிக அதிகமாக துன்மார்க்கமாக வாழ்ந்தனர், மடிந்தனர். ஆதியாகமத்தின் அடிப்படை நோக்கம் முழு மனுக்குலத்தின் வரலாற்றை விவரிப்பதல்ல, மாறாக சிருஷ்டிப்பு, ஆதி தம்பதியினரின் வீழ்ச்சி, பாவம் மரணத்தின் ஆட்சியைக் குறித்து ஒரு சுருக்க வரலாற்றை அளிக்க வடிவமைக்கப்பட்டது, மேலும் நியாயத்தீர்ப்பின் மத்தியில் தேவனுடையக் கிருபையையும், ஸ்திரீயின் "வித்தை" (3:15) கர்த்தர் ஆசீர்வதித்த சொல்லொண்ணா வம்சத்தின் தொடர்ச்சியை காட்டுவதே நோக்கமாகும். சேத், ஏனோக், நோவா, என்பவர்களின் வாழ்வின் வழியாக இந்த ஆசீர்வாதம் தொடர்கின்றது. மேலும் இவர்களின் தூரத்து வம்சங்களான ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, இஸ்ரவேலர் மூலமாக தேசம் ஆசீர்வதிக்கப்பட வேண்டும் (கலா. 3:8-29).

சில தலைமுறையினர் மரணமடைந்த சில ஆண்டுகளிலோ, அல்லது சில தலைமுறைகளுக்குப் பின்னரோ மற்றவர்களின் நினைவுகளிலிருந்து ஒரு கனவைப் போல் மறைந்துபோவார்கள். ஞானி சொன்னதில் எந்த ஒரு ஆச்சரியமுமில்லை. "மாயை, மாயை, எல்லாம் மாயை" (பிர. 1:2) அவர் சொன்னார்.

> … மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்; இனி அவர்களுக்கு ஒரு பலனுமில்லை, அவர்கள் பேர்முதலாய் மறக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் சிநேகமும், அவர்கள் பகையும், அவர்கள் பொறாமையும் எல்லாம் ஒழிந்து போயிற்று; சூரியனுக்குக் கீழே செய்யப்படுகிறதொன்றிலும் அவர்களுக்கு இனி என்றைக்கும் பங்கில்லை (பிர. 9:5, 6).[26]

இது எல்லா மனுக்குலத்திற்கும் பொதுவான நியதி, ஆதியாகமம் 5 உள்ள குறிப்பிடப்பட்டுள்ள வம்சவரலாறில் உள்ளவர்களுக்கும் பொருந்தும், வேதத்தில் குறிக்கப்பட்டுள்ள பெயர் பட்டியல்கள் நமக்கு நிதானமான ஒரு எச்சரிக்கையைத் தருகின்றது, அதாவது, நம் சரீர வாழ்க்கை என்பது சிறிது காலத்திற்கே உரியது. நம்மில் சிலர் உலக வரலாற்றிலே நீடித்த தாக்கத்தை ஏற்படுத்துகிறோம்.

விசுவாசி தேவனால் மறக்கப்பட்டுவிட்டேனோ என கவலைப்பட வேண்டியதில்லை. "கர்த்தர் தம்முடையவர்களை அறிவார்" (2 தீமோ. 2:19). அவருக்கு கீழ்ப்படிந்தவர்களின் பெயர்கள் அனைத்தும் "ஜீவ புத்தகத்தில்" எழுதப்பட்டிருக்கிறது (பிலி. 4:3; வெளி. 20:12-15) பரலோகத்தில் பெயர் எழுதப்பட்டவர்கள் கர்த்தரை நேசிக்கிறவர்களாகவும், தங்கள் வாழ்வில் அவரை மகிமைப் படுத்துகிறவர்களாகவும் இருப்பார்கள். இவர்கள் வாழ்வு தம்மை சூழ்ந்திருப்போர் வாழ்வில் ஒரு மாற்றத்தையும் ஏற்படுத்தும். தேவனின் நாமத்தில் பிறருக்கு ஊழியமும் சேவையும் செய்வார்கள். அவர்கள் ஒரு நாள் "உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, .... உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" (மத். 25:21); மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் (மத். 25:40). என்று இயேசு சொல்லும் மகிழ்ச்சியான சத்தத்தைக் கேட்பார்கள்.

*இன்று போலவே, ஒரு வாழ்க்கை மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.* தேவன் ஏன் ஏனோக்குடைய வாழ்க்கையை வம்சவரலாறு பட்டியலில் விசேஷமாக மாற்றினார்? முதலாவதாக, ஏனோக்கு கர்த்தருடைய வருகையில் துன்மார்க்கத்திற்கு எதிராக நியாயத்தீர்ப்பைக் குறித்து பிரசங்கத்தின் மூலமாக உலகிற்கு போதித்தார் (யூதா 14, 15).[27] அழிப்பது அடிப்படையில் தேவனது திட்டமல்ல, ஆனால் பக்தியற்றவர்களுக்கு அவர்களின் பாவத்தைப் பற்றி உணர்த்தி அவர்களை மனந்திரும்புதலுக்கு நேராக நடத்துவதே (2 பேதுரு 3:9, 10).

இரண்டாவதாக, அவரது வாழ்க்கை மூலமாக உலகிற்கு போதிப்பதாகும். இதன் சாராம்சம் "ஏனோக்கு தேவனோடு நடந்தான்" (5:22, 24) என்பதிலேயே நாம் அறியலாம். விசுவாசத்திலே வாழ்ந்த வாழ்க்கை நேர்மை பரிசுத்தம் போன்றவை ஒருவருடைய பிரசங்கம் பலமுள்ளதாக இருக்கத்தேவை. "அவன் தேவனுக்குப் பிரியமானவனென்று அவன் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்னமே சாட்சி பெற்றான்" (எபி. 11:5). துன்மார்க்கமும், இருளும் அவனை சூழ்ந்திருக்க, அதற்கு எதிர் மறையாக அவருடைய தூய்மையான வாழ்வும் நல்ல வேலைகளும் தேவனுடைய மகிமையை காட்டும் கலங்கரை விளக்காக இருக்கும் (மத். 5:16 காண்க).

மூன்றாவதாக, உலகத்திற்கு வாழ்வை விட்டு ஏனோக்கு எப்படிப்

பிரிந்தார் என உலகிற்கு போதிக்கிறார். ஆதியாகமத்தின் ஆசிரியர் “தேவன் அவரை எடுத்துக் கொண்டார்” (5:24) எனவும், எபிரெயத்தின் ஆசிரியர் இதனை ஆமோதிக்கும் வண்ணமாக அவர் “எடுத்துக்கொள்ளப்பட்டார்” (எபி. 11:5) எனவும் எழுதுகின்றார்கள். பெருவெள்ளத்திற்கு முன் பாவ நோய், இருள் நிறைந்த தலைமுறையினர், மனிதனின் முடிவு பாடு, உபத்திரவம், மரணம் மட்டுமே கொண்டதல்ல என்று, இந்த மனுக்குலம் அறிய வேண்டியதாயிருந்தது, ஏனோக்கு தேவனால் எடுத்துக் கொள்ளப்பட்டதானது, இந்த வாழ்கைக்கு அப்பால் ஒரு இடம் தயாராக காத்திருக்கிறது என்பதற்கு சாட்சியாக இருக்கிறது. சர்வலோகத்தின் தேவனானவர் அவரது சித்தத்திற்கு இசைந்து ஜீவிக்கிறவர்களுக்கு நன்மையையும், புகழையும் அளிப்பார் என்பது கூடுதலான சாட்சியாகும். இறுதியாக தேவன் காயீனிடம் பாவத்தை மேற்கொள்ள (4:7) ஆலோசனை வழங்குவதைக் காண்கிறோம். இதுவே தெய்வீக அங்கீகாரத்தைப் பெறவும், கர்த்தருடன் நித்தியத்தைக் கழிக்கவும் சிறந்த வழி.

---

இறுதிக் குறிப்புகள்

[1]*Seper* என்பதின் அடிப்படை பொருள் “‘ஆவணம்’ அதாவது சிறிய எழுதுப் பொருள் ... அதின் மீது எதோ எழுதப்பட்டுள்ளது” முன் காலத்தில் இது கல்லில் செதுக்கப்படுதல், பெப்பரியாஸ் அல்லது தோல் சுருளில் எழுதப்படுதல் எனவும். பிற்காலத்தில் புத்தகத்தில் அல்லது ஆவணங்களில் எழுதப்படுதல் எனப் பொருள் கொள்ளலாம். (J. Kühlewein, “סֵפֶר,” in Theological Lexicon of the Old Testament, trans. Mark E. Biddle, ed. Ernst Jenni and Claus Westermann [Peabody, Mass.: Hendrickson Publishers, 1997], 2:808.) [2]இந்த நீண்ட வாழ்நாளை தேவன் எப்படி நீடித்தார் என இந்தப் பாடம் கூறுவதில்லை. ஆனால் ஒரு விளக்கம் பெரும் வெள்ளத்திற்கு முன் அடர்த்தியான மேகம் வானத்தில் வயதைக் கூட்டுகின்ற சூரியக்கதிர்களை வடிகட்டினது, எனவே மக்கள் இன்றுபோல் துரிதமாக மூப்படையவில்லை. (John C. Whitcomb, Jr., and Henry M. Morris, *The Genesis Flood* [Philadelphia: Presbyterian & Reformed Publishing Co., 1961], 399–405.) [3]மகலெயேல் என்று இன்னொருவர் நெகேமியா 11:4, லும்; யாரேத் என்று 1 நாளாகமம் 4:18 லும் வருகின்றது. 4சில பாடங்கள் ஒன்றுப் போலவே உள்ளது. மல்கியா 2:6, தேவன் ஆசாரியர்களிடமிருந்து என்ன எதிர் பார்க்கிறார் என வெளிப்படுத்துகிறார். லேவியரைக் குறித்து, தேவன் சொன்னார்; “நீதியிலும் சமாதானத்திலும் அவன் என்னோடு நடந்தான்” இதுபோலவே ஆபிரகாமும், ஈசாக்கும் தேவனுக்கு “முன்பாக” நடந்தார்கள் (17:1; 24:40; 48:15). [5]Jon D. Levenson, “Genesis,” in *The Jewish Study Bible*, ed. Adele Berlin and Marc Zvi Brettler (New York: Oxford University Press, 2004), 20. [6]The story of Enoch’s translation in Genesis 5 is simulated in pagan literature. See Gordon J. Wenham, *Genesis 1—15*, Word Biblical Commentary, vol. 1 (Waco, Tex.: Word Books, 1987), 128. [7]Derek Kidner, *Genesis: An Introduction and Commentary*, The Tyndale Old Testament Commentaries (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1967), 81. [8]Leonard J. Coppes, “נוּחַ,” in *TWOT*, 2:562–63. [9]ஆதியாகமம் 10:1ன் படி நோவாவுக்கு பேரப்பிள்ளைகள் பெருவெள்ளத்திற்கு பின்னர் வரைக்கும் பிறக்கவில்லை. 10கே. ஏ. கிட்சன் சிருஷ்டிப்பின் காலம் கி.மு. 4000க்கு முன்னரே நிகழ்ந்திருக்க வேண்டும் என்கிறார். ஏனெனில் மனித சஞ்சாரமும் நாகரீகத்தின் வளர்ச்சியும் பழைய சமீபத்தைய கிழக்கத்திய இடங்களில் இக் காலத்திறகு 1000 ஆண்டுகளுக்கு முன்னரே இருந்திருக்க வேண்டும். (K. A. Kitchen, *Ancient Orient and Old Testament* [Downers Grove, Ill.: InterVarsity, 1966], 36–37.)

[11]Gleason L. Archer, Jr., "The Chronology of the Old Testament," in *The Expositor's Bible Commentary*, vol. 1, *Introductory Articles*, ed. Frank E. Gaebelein (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1979), 361. [12]John H. Sailhamer, "Genesis," in *The Expositor's Bible Commentary*, vol. 2, *Genesis, Exodus, Leviticus, Numbers*, ed. Frank E. Gaebelein (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1990), 72. [13]Kenneth A. Mathews, *Genesis 1—11:26*, The New American Commentary, vol. 1A (Nashville: Broadman & Holman Publishers, 1996), 303–5. [14]R. K. Harrison, "Genealogy," in *The International Standard Bible Encyclopedia*, rev. ed., ed. Geoffrey W. Bromiley (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1982), 2:426. [15]ஈசாக்கு ரெபெக்காவை திருமணம் செய்யும் போது அவருக்கு வயது நாற்பது (25:20), ஏசாவும் முதல் திருமணம் செய்தப்போது அதே வயது (26:34) இது தான் முறையல்ல மாறாக சிலர் காரியங்களில் மட்டுமே. [16]ஒருவருடைய கணக்குப்படி "முப்பது அல்லது குறைவாக" (Harrison, 2:426). [17]பொதுவாகவே வம்சவரலாறில் ஆண்களின் வம்ச வழியே கண்டுப்பிடிக்கப்படுவர்; ஆனால் இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாற்றில் மத்தேயு பலப் பெண்களைச் சேர்த்துள்ளார் (மத். 1:3-6, 16). [18]லாமேக்கின் மகள் நாமாத் தவிர்க்கப்பட்டுள்ளார், காரணம் பொதுவாக கணக்கில் வருவதில்லை. [19]Jack M. Sasson, "Generation, Seventh," in *The Interpreter's Dictionary of the Bible*, supplementary vol., ed. Keith Crim (Nashville: Abingdon Press, 1976), 355–56. [20]2 இராஜாக்கள் 14:21 "அசரியாவை" 2 நாளாகமம் 26:1ல் உசியா என அவர் அழைத்தார்.

[21]"பெற்றார்" என்ற வினைச் சொல்லுக்கு பதிலாக "அப்பா" என்றப் பெயர் சொல்லை இன்றைய நவீன மொழிபெயர்ப்புகள் பயன்படுத்துகின்றன. [22]Paul R. Gilchrist, "יָלַד," in *TWOT*, 1:379. [23]F. Charles Fensham, *The Books of Ezra and Nehemiah*, The New International Commentary on the Old Testament (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1982), 98. [24]பூமியின் கடை எல்லையிலுள்ள சில மகன் வழி பாரம்பரியத்திலுள்ள சமுதாயத்தில் இப்படிப்பட்ட வழக்கம் உள்ளது. [25]André Lemaire, "Writing and Writing Materials," in *The Anchor Bible Dictionary*, ed. David Noel Freedman (New York: Doubleday, 1992), 6:999. [26]ஞானி மரித்தவர்களைப் பற்றி கூறுகையில் மரணத்தை அனுபவிப்பவர்கள் சுயநினைவை இழந்திருப்பார் அல்லது உடலிலிருந்து பிரிவர் என்று ஞானி கூறினார் என சிலர் நம்புகிறார்கள். மாறாக அவர்கள் பூமியில் நடப்பதை அறியார், அதே போல் பூமியில் இருப்போர் அவர்களை மறந்து விடுகின்றனர் அவர்களின் நினைவும் துரிதமாக நினைவிலிருந்து மறைந்து விடுகின்றது என்று அவர் கூறினார். [27]For a discussion of Enoch in Jude 14, 15, see Duane Warden, *1 & 2 Peter and Jude*, Truth for Today Commentary (Searcy, Ark.: Resource Publications, 2009), 499–502.